




நல்லவே எண்ணல் வேண்டும்...,

எண்ணிய முடிதல் வேண்டும்...,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 100 | 05.10.2025 | SUNDAY | PURATTASI : 19 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 100 | 05.10.2025 | ஞாயிற்றுக்கிழமை | புரட்டாசி : 19 | விலை : ரூ.5/-



3 எச்1பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு

4 முதல்வர் கரூருக்கு சென்றது தேர்தல் ஆதாயத்துக்காகத்தான்: எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

2 பிரதமர் மோடி புத்திசாலியான தலைவர்: ரஷ்ய அதிபர் புதின் பாராட்டு


# கரூர் துயரத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு உண்மையை வெளிக்கொண்டு வரும்: முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை: அக்.5-

"கரூர் துயரத்தில் உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) தனது விசாரணையைத் தொடங்கும். இதன் மூலம், முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவோம் என்று மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்." என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "கரூர் துயரம் குறித்து உயர் நீதிமன்றம் கூறியுள்ள கருத்துகள், வழிகாட்டுதல்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகத் தீவிரமாக கவனத்தில் கொண்டு செயலாற்றி வருகிறது.

கரூரில் நடந்த துயரத்தால் நாம் அனைவருமே நெஞ்சம் கலங்கிப் போயிருக்கிறோம். தம் அன்புக்குரியோரை இழந்து தவிக்கும் ஒவ்வொரு குடும்பத்தின் கண்ணீரையும் கண்டு தவிக்கிறேன்.

உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) தனது விசாரணையைத் தொடங்கும். இதன் மூலம், முழு உண்மையையும் வெளிக்கொண்டு வருவோம் என்று மாநிலத்தின் முதலமைச்சராக





மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். அனைத்து மட்டங்களிலும் பொறுப்பு உறுதி செய்யப்படும்.


பலவற்றிலும் இந்தியாவுக்கே முன்னோடியான தமிழ்நாடு, கூட்ட நெரிசல் விபத்துகளைத் தவிர்ப்பதிலும் நாட்டுக்கு வழிகாட்டும். மாநிலம் முழுவதும் துறைசார் வல்லுநர்கள், அரசியல் கட்சியினர், செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரோடும் கலந்தாலோசித்து ஒரு முழுமையான 'நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) வடிவமைப்போம். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவும் பின்பற்றத்தக்க மாடலாக இது அமையும்.

துடைக்க முடியாத இந்தத் துயரச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் நோக்கோடு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாமல் ஒரு நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்போம். இந்தக் கூட்டு முயற்சியில் அனைவரது யோசனைகள், ஆலோசனைகளையும் வரவேற்கிறேன். ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பில்லாதது. நம் மக்களின் இன்னுயிரைக் காக்கவும், இனி இப்படி ஒரு பெருந்துயரம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே நிகழாமல் தடுக்கவும் ஒன்றிணைவோம்." என்று கூறியுள்ளார்.

## புரட்டாசி 3ம் சனிக்கிழமையை முன்னிட்டு சின்னாளபட்டி ஸ்ரீஅஞ்சலி வரத ஆஞ்சநேயருக்கு திருப்பதி ஏழுமலையான் சிறப்பு அலங்காரம்

சின்னாளபட்டி, அக்.05

புரட்டாசி 3ம் சனிக்கிழமையை முன்னிட்டு சின்னாளபட்டி ஸ்ரீ அஞ்சலி வரத ஆஞ்சநேயருக்கு திருப்பதி ஏழுமலையான் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி மேட்டுப்பட்டி பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ அஞ்சலிவரத ஆஞ்சநேயர் திருக்கோயில் 16அடி உயரத்தில் நின்ற நிலையில் தன்னை வணங்க வரும் பக்தர்களை வணங்குவது போல் சிலை அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இந்தியாவிலேயே இக் கோவிலில் உள்ள அஞ்சலிவரத ஆஞ்சநேயருக்குத்தான் 23 வகை சிறப்பு அலங்காரத்தை செய்கின்றனர். குறிப்பாக பஞ்சமுக அலங்காரம், பாலமாருதி அலங்காரம், சுயம் திருமேணி அலங்காரம், பச்சைகாப்பு அலங்காரம், செந்தூரக் காப்பு அலங்காரம், வெண்ணெய் காப்பு அலங்காரம், 1008 ஜிலேபி அலங்காரம், கரும்பு காப்பு அலங்காரம், கனிகாப்பு அலங்காரம், தியானமாருதி அலங்காரம், உட்பட பலவித அலங்காரங்களை செய்வதுண்டு, புரட்டாசி 3ம் சனிக்கிழமையை முன்னிட்டு அஞ்சலி வரத ஆஞ்சநேயருக்கு திருப்பதி ஏழுமலையான் சிறப்பு அலங்காரம் செய்திருந்தனர். கையில் பச்சை பதக்கம் கிரிடம், நவகன்டி மாலையுடன், அபயகஸ்தம், தசாவதார ஒட்டியானத்துடன் தலையில் தங்க கீரிடத்துடன் ஆஞ்சநேயரை திருப்பதி ஏழுமலையான் போல் அலங்காரம் செய்திருந்தனர். ஸ்ரீராம பிரானுக்கு தலையில் வைர கீரிடத்துடன் அலங்காரம் செய்திருந்தனர். இது குறித்து கோவில் தலைமை குருக்கள் ஸ்ரீசுந்தரராஜ பட்டாச்சாரியா கூறுகையில் திருப்பதிக்கு சென்று ஏழுமலையானை தரிசிக்க முடியாதவர்கள் இங்குள்ள ஆஞ்சநேயரை தரிசனம் செய்தால் அதற்குரிய பலன் கிடைக்கும். இந்த அலங்காரம் 5 நாட்களுக்கு இருக்கும். திருப்பதி ஏழுமலையான் அலங்காரத்தில் ஸ்ரீ அஞ்சலி வரத ஆஞ்சநேயரை தரிசிக்கும் பக்தர்கள் செல்வ செழிப்புடன் வாழ்வார்கள் என்றார். சிறப்பு அலங்காரத்தில் அஞ்சலி வரத ஆஞ்சநேயரை தரிசிக்க வத்தலக்குண்டு, செம்பட்டி, கொடைரோடு, ஒட்டன்சத்திரம், மதுரை, கரூர் ஆகிய ஊர்களில் இருந்து ஏராளமானோர் கோவிலுக்கு வந்திருந்து சாமி தரிசனம் செய்தவண்ணம் இருந்தனர்.



■ மதுரை மாவட்டம் மாவட்டவிளையாட்டு அரங்கில் 2025 ஆம் ஆண்டுமுதலமைச்சர் கோப்பைக்கானமாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளைமாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, (3 10 25)துவக்கி வைத்து வெற்றி பெற்றவீரர் வீராங்கனைகளுக்கு பதக்கம் நினைவு பரிசுமற்றும் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார்,மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த்,மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், ஆகியோர் உடன் உள்ளனர்.

## கரூர் துயரசம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது : விஜய்யை பார்த்து நாங்கள் ஏன் பயப்பட வேண்டும்; எது வந்தாலும் நாங்கள் சந்திப்போம்

### திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி

திருச்சி, அக்.05

திருச்சி மாவட்டம் சோமரசம்பேட்டை அருகில் அரசு ஊரக சித்த மருத்துவமனை வளாகத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர்வே. சரவணன், திருவரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி, மணிகண்டம் ஒன்றிய திமுக செயலாளர் மாத்தூர் கருப்பையா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரணி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மா.வத்சலா மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது:



ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருந்த சித்த மருத்துவமனை 30 லட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்வதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கரூர் சம்பவத்திற்கு திமுகதான் பொறுப்பேற்க வேண்டும் என எடப்பாடி கூறியது என்ற கேள்விக்கு, அவர் வேறுஎன்ன சொல்லமுடியும் செய்ய முடியும், நேற்று முதலமைச்சர் கூறியதை கேட்டீர்களா? தமிழகத்தில் பல்வேறு பிரச்சனைகள் நடைபெற்றுவருகிறது, வெள்ளம்வந்தது அதற்குகூட பணம் வழங்கவில்லை அப்போதுகூட வராத பாஜக எம்பிக்கள்குழு உடனடியாக இந்த நிகழ்வுக்கு வருவதற்கு காரணம் என்ன என்றும் முதல்வர் கேள்வி எழுப்பியுள்ளார் அதுமட்டுமின்றி, பாஜக கூட்டணியில் அதிமுகவும் இருப்பதால் அதுபோன்றுதான் பேசுவார், மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் நீதிமன்றத்தில் கூறியதுதான் உண்மை நிலைமை.

கரூர் துயரசம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் சரியாகத்தான் சொல்லி இருக்கிறது விஜய் நேரில் வந்து பார்க்கவில்லை என பத்திரிகை மட்டும் ஊடகங்கள் கூறுகிறது.

விஜய் கூட்டத்திற்கு அனுமதி வாங்கியவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள்மீது வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது, நீதிமன்றம் அக்கட்சி பற்றி கூறிவஇருக்கிற நிலையில் அவர்களை (விஜய்யை) பார்த்து நாங்கள் ஏன் பயப்படவேண்டும், பயந்து நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? எதுவந்தாலும் நாங்கள் சந்திப்போம் .

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

## திருச்சி மாவட்டத்தில் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் நடவடிக்கைகளை கண்காணிக்கும் 'கருடன்' மொபைல் செயலி அறிமுகம்

திருச்சி, அக்.05-

திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் பொருட்டு "கருடன்" எனும் மொபைல் செயலியை எஸ்.பி.நாகரத்தினம் செய்து வைத்தார். திருச்சி மாவட்டம் முழுவதும் உள்ள கொலை, கொள்ளை, திருட்டு, சட்ட விரோதசெயல்கள், மற்றும் பொதுமக்களின் அமைதிக்கு அச்சுறுத்தும் வகையில்

செயல்படும் சமூக விரோதிகள் மற்றும் ரவுடிகள் என 850ற்கும் மேற்பட்ட சரித்திர

பதிவேடு குற்றவாளிகளை காவல்துறையினர் நேரடியாக அவர்களின் இருப்பிடத்திற்கு சென்று குற்ற சம்பவங்கள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும்

பொருட்டு தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர்.




இந்நிலையில் மேற்படி திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்கும் பொருட்டு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம் ஆலோசனையின் பேரில் திருச்சி அண்ணா பல்கலைக்கழக கணிணி அறிவியல் துறையுடன் சேர்ந்து சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணிக்கும் வகையில் "கருடன்" எனும் புதிய மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.இந்த செயலி அறிமுக நிகழ்ச்சி திருச்சி சுப்பிரமணியபுரம், காவல் திருமண மண்டபத்தில் நடைபெற்றது .

செ.செல்வநாகரத்தினம் தலைமை உரையாற்றி "கருடன்" மொபைல் செயலியை அறிமுகம் செய்து வைத்தார்.மேலும் இந்த செயலியை உருவாக்கியதில் பெரும்பங்காற்றிய

அண்ணா பல்கலைக்கழக கணிணி அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் மற்றும் இறுதியாண்டு மாணவர்களான அகில்,அகமத், ஆசிப் நவ்ஹித், மோகன் ஆகியோரை வெகுவாக பாராட்டியதுடன்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட காவல் அதிகாரிகள், காவலர்களுக்கு

இச்செயலியின் முக்கியத்துவம் குறித்தும், செயலியை பயன்படுத்துதல் குறித்தும் விரிவாக விளக்கவுரையா ற்றினார்.




# சோழவந்தான் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

சோழவந்தான், அக்.05-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் ஆணையின்படி, சோழவந்தான் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், மாவட்ட கழகச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், தேனி பாராளுமன்ற உறுப்பினர், தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்செல்வன் அவர்கள் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றிட ஆலோசனைகள் வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், சோழவந்தான் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சுப.த. சம்பத் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# நாட்டில் 24% வரி செலுத்தும் 0.5% ஜெயின் சமூகம்: அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு

புதுடெல்லி, அக்.05-

நாட்டின் மக்கள் தொகையில் ஜெயின் சமூகத்தின் எண்ணிக்கை 0.5 சதவிகிதம். ஆனால் இவர்கள் நாட்டின் மொத்த வரி பங்களிப்பில் 24 சதவிகிதம் செலுத்துவதாக மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங் பாராட்டியுள்ளார்.

ஹைதராபாத்தில் ஜெயின் சர்வதேச வர்த்தக அமைப்பு இணைப்பு 2025 மாநாடு நடைபெற்றது. இதில் முக்கிய விருந்தினராகப் பங்கேற்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையாற்றினார். இந்த மாநாட்டில் பங்கேற்று அவர் பேசியபோது, "இந்திய பொருளாதாரத்தில் ஜெயின் சமூகத்தினரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அவர்கள் மக்கள் தொகையில் 0.5% மட்டுமே உள்ளனர்.



ஆனால், இவர்கள் வரியில் சுமார் 24% பங்களிக்கின்றனர். சிறிய மக்கள் தொகை இருந்தபோதிலும், ஜெயின் சமூகத்தினர் இந்திய பொருளாதாரத்தின் முக்கிய தூணாக உருவெடுத்துள்ளனர். மருந்துத் துறையாக இருந்தாலும் சரி, விமானப் போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக இருந்தாலும் சரி, ஜெயின் சமூகத்தினர் அனைத்திலும் முன்னணியில் உள்ளனர்.

மருந்து, விமானப் போக்குவரத்து, நகைகள், ரியல் எஸ்டேட் மற்றும் கல்வி போன்ற துறைகளில் ஜெயின் மக்கள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றனர். இந்தியாவின் பல துறைகளை இவர்கள் முன்னோக்கி எடுத்துச் செல்கின்றனர். சன் பார்மாவின் திலீப் ஷாங்வி, இண்டிகோ ஏர்லைன்ஸின் ராகேஷ் கங்வால் மற்றும் ஜெயின் இரிகேஷன் நிறுவனத்தின் பவர்லால் ஜெயின் போன்ற பெயர்கள் இந்தியத் துறையில் அலைகளை உருவாக்குகின்றன.

இவர்களது எண்ணிக்கை ஜெயின் சமூகத்தின் பொருளாதார வலிமையைப் பிரதிபலிக்கிறது. அவர்களின் மத நம்பிக்கைகளைக் கருத்தில் கொண்டு, இந்த சமூகம் பாரம்பரியமாக வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தில் கவனம் செலுத்தி வருகிறது. ஜெயின்கள் வரித் துறைக்கு பங்களிப்பு செய்வது மட்டுமல்லாமல், நாட்டின் மிகப்பெரிய வணிகங்கள் பலவற்றையும் ஆதரிக்கின்றனர்.' எனத் தெரிவித்தார்.

மொத்த வருமான வரி வசூல் இந்தியாவின் 2025 26 நிதியாண்டுக்கான நிகர நிறுவனமற்ற வரி வசூல் ரூ. 5.8 லட்சம் கோடியாக இருந்தது. இதில் தனிநபர்கள், எச்யூஎப் மற்றும் நிறுவனங்களின் புள்ளிவிவரங்களும் அடங்கும். இது முந்தைய ஆண்டை விட 9.18 சதவிகிதம் வளர்ச்சியைக் குறிக்கிறது.



■ நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் பல்வேறு துறைகளில் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# பிரதமர் மோடி புத்திசாலியான தலைவர்: ரஷ்ய அதிபர் புதின் பாராட்டு

மாஸ்கோ, அக்.05-

பிரதமர் நரேந்திர மோடி சமச்சீரான மனநிலை கொண்ட புத்திசாலியான தலைவர் என்று ரஷ்ய அதிபர் புதின் பாராட்டு தெரிவித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு எதிராக இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 50 சதவீத வரி விதித்துள்ளார். இதனால் இந்தியா அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் அண்மையில் பேசிய ட்ரம்ப், "ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவும் சீனாவும் தொடர்ந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது, ரஷ்யாவின் உக்ரைன் போருக்கு முக்கிய நிதி ஆதாரமாக உள்ளது" என்றும் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் ரஷ்யாவின் சோச்சி நகரில் ஒரு கலந்துரையாடல் கூட்டத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பேசியதாவது: ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வது முற்றிலும் பொருளாதார நலனுக்கானது. அதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை. நமது கச்சா எண்ணெயை இந்தியா வாங்க மறுத்தால் அந்நாட்டுக்கு சில இழப்புகள் ஏற்படும்.

இந்திய மக்கள், அரசியல் தலைமை எடுக்கும் முடிவுகளை உன்னிப்பாக கண்காணிப்பார்கள். யாருக்கு முன்பாகவும் எந்த அவமானத்தையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். பிரதமர் மோடியை நான் நன்கு அறிவேன்; அவர் ஒருபோதும் தவறான முடிவை எடுக்க மாட்டார். அமெரிக்க வரிவிதிப்பால் இந்தியாவுக்கு இழப்பு ஏற்படுகிறது. இது, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதன் மூலம் ஈடு செய்யப்பட்டு விடும். மேலும் இறையாண்மை கொண்டநாடு என்ற கவுரவத்தை இந்தியா பெறும். இந்தியாவும் ரஷ்யாவும் சிறப்புமிக்க உறவை



பகிர்ந்து கொள்கின்றன. கடந்த காலங்களிலும் இந்தியாவுடன் நமக்கு எவ்வித பிரச்சினையோ,பதற்றமோ இருந்ததில்லை.

பிரதமர் மோடி எனது நம்பிக்கைக்குரிய நண்பர். அவர் சமச்சீரான மனநிலை கொண்ட புத்திசாலியான தலைவர். தேசநலனுக்காக பாடுபடக்கூடியவர். இந்தியாவிடம் இருந்து கூடுதலாக வேளாண் பொருட்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்து வர்த்தகப் பற்றாக்குறையை ரஷ்யா குறைக்கும்.

வர்த்தக கூட்டாளிகள் மீதான அமெரிக்காவின் அதிக வரிவிதிப்பு, உலகளாவிய பணவீக்கத்தை அதிகரிக்கும். மேலும் அமெரிக்க ரிசர்வ் வங்கி தனது வட்டி விகிதங்களை அதிகமாக பராமரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இவ்வாறு புதின் பேசினார்.

'இந்திய திரைப்படங்களை மிகவும் நேசிக்கிறோம்' புதின் தனது உரையில் இந்திய திரைப்படங்கள் மீதான தனது அன்பை வெளிப்படுத்தினார்.

இதுகுறித்து அவர் பேசும்போது, "ரஷ்யாவில் இந்திய திரைப்படங்கள் மீதான ஆர்வம் இன்றும் வலுவாக உள்ளது. இந்திய சினிமாவை நாங்கள் மிகவும் நேசிக்கிறோம். இந்திய திரைப்படங்களுக்கு என தனி டிவி சேனல் வைத்திருக்கும் உலகின் ஒரே நாடாக ரஷ்யா இருக்கலாம் என கருதுகிறேன். இந்தியா ரஷ்யா இடையிலான உறவு அரசியலை மட்டுமல்ல, கலாச்சார மற்றும் மனிதாபிமான உறவுகளையும் உள்ளடக்கியது. இந்திய மாணவர்கள் பலர் கல்விக்காக ரஷ்யா வருகின்றனர். இந்திய மக்களையும் அவர்களது கலாச்சாரத்தையும் ரஷ்யா வரவேற்கிறது" என்றார்.

இந்திய திரைப்படங்களை புதின் பாராட்டுவது இது முதல் முறை அல்ல. கடந்த காலங்களில், பாலிவுட் படங்கள் பற்றியும் ரஷ்யாவில் அவற்றின் பிரபலம் பற்றியும் அவர் அடிக்கடி பேசியுள்ளார். கடந்த ஆண்டு அக்டோபரில், "வேறு எந்த பிரிக்ஸ் நாட்டின் திரைப்படங்களை விடவும் இந்திய படங்கள் ரஷ்யாவில் பிரபலமாக உள்ளன" என்றார்.



# திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே காந்தாரியில் 50,000 நெல் மூட்டைகள் தேக்கம்

திருவாரூர், அக்.05-

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே காந்தாரி கிராமத்தில் 50,000 நெல் மூட்டைகள் தேக்கம் அடைந்துள்ளதால் அவற்றை கொள்முதல் செய்து கிட்டங்கிகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். இந்த ஆண்டு 1 லட்சத்து 50 ஆயிர ஏக்கர் பரப்பளவில் குருவை நெல் சாகுபடி பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, உள்ளிட்ட பகுதியில் குருவை அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் தங்கள் அறுவடை செய்த நெல் மூட்டைகளை விற்பனை செய்வதற்காக மாவட்டம் முழுவதும் 382 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில், மன்னார்குடி அருகே காந்தாரி கிராமத்தில் சுமார் 2700 ஏக்கர் பரப்பளவில் குருவை நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அங்கு உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகள் தங்கள் நெல் மூட்டைகளை விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக விடுமுறை தினம் என்பதால் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யப்படாமல் இருந்த வண்ணம் சுமார் 50,000 நெல் மூட்டைகள் அங்கு தேக்கம் அடைந்திருக்கிறது. சாலையின் இருபுறங்களிலும் நெல்மணிகளை கொட்டி வைத்து காய வைத்து விவசாயிகள் வருகிறார்கள். இந்த நெல் மூட்டைகளை விற்பனை செய்தால் மட்டுமே அவர்களுடைய செலவு தொகையை எடுக்க முடியும். உடனடியாக நெல்மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






# சிவன்மலை முருகன் கோயிலில் 'ஆண்டவன் உத்தரவு' கண்ணாடிப் பேழையில் கடல் நீர் வைத்து பூஜை

திருப்பூர், அக்.05-

காங்கயம் அருகே சிவன்மலையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலின் ஆண்டவன் உத்தரவு கண்ணாடிப் பேழையில் இன்று (அக். 4) கடல்நீர் வைத்து சிறப்பு வழிபாடு நடந்தது.

காங்கயம் அருகே, சிவன்மலையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 'ஆண்டவன் உத்தரவு' என்ற பெயரில் விநோத வழிபாடு நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாவட்டம், காங்கயம் அருகே சிவன்மலையில் புகழ்பெற்ற சுப்பிரமணியசுவாமி மலைக் கோயில் உள்ளது. எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு சிறப்பு அம்சமாக, இக்கோயிலில் 'ஆண்டவன் உத்தரவு' என்ற பெயரில், ஏதாவது ஒரு பொருளை வைத்து சிறப்புப் பூஜை செய்யும் வழக்கம் பின்பற்றப்படுகிறது.

இது குறித்து முருக பத்கர்கள் சிலர் கூறும்போது, 'இத்தகைய கண்ணாடிப் பெட்டிக்குள் என்ன வகை பொருளை வைக்க வேண்டும் என்ற தேர்வு முறை சற்று வித்தியாசமானது. சிவன்மலை முருகன் ஏதாவது ஒரு பக்தரின் கனவில் வந்து, இன்ன பொருளை வைத்து பூஜை செய்ய உத்தரவிடுவதாக கூறப்படுகிறது. இதனால் தான், இது 'ஆண்டவன் உத்தரவு' என்றும் அழைக்கப்படுகிறது' என்றனர்.

இந்நிலையில், கோவை மாவட்டம் மணியகாரம்பாளையம் இடிகரையைச் சேர்ந்த பெண் பக்தர் பவானி என்பவரின் கனவில் வந்ததாக கடல்நீர் வைத்துப் பூஜை செய்யப்பட்டு, மேற்கண்ட பொருள் கண்ணாடிப் பேழைக்குள் இன்று வைக்கப்பட்டது.

இவ்வாறு காட்சிக்கு வைக்கப்படும் பொருள் தொடர்பாக ஏதேனும் ஒரு சம்பவம் நிகழும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

முன்னதாக கண்ணாடிப் பேழைக்குள் கடந்த மார்ச் 6ம் தேதி முதல் பிரம்பு மற்றும் சூடம் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்த நிலையில், சுமார் 7 மாதங்களுக்குக் பிறகு பக்தரின் கனவில் வந்த கடல்நீர் வைக்கப்பட்டு பூஜிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அடுத்த பூஜைப் பொருள் மற்றொரு பக்தரின் கனவில் வரும் வரை, கண்ணாடிப் பேழைக்குள் இந்தப் பொருளை பக்தர்கள் பார்த்து வழிபாடுவார்கள்.

# சிறப்பு புலனாய்வு குழுவிடம் வழக்கு ஆவணங்களை ஒப்படைக்க கரூர் போலீஸ் சென்னை விரைந்தது: எஸ்.ஐ.டி.யில் 2 பெண் எஸ்.பிக்கள்

கரூர், அக்.05-

கரூர் சம்பவம் பற்றி விசாரிக்க சென்னை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வு குழுவிடம் இன்று கரூர் போலீசார் வழக்கு விசாரணை ஆவணங்களை ஒப்படைக்கின்றனர். கரூரில் கடந்த 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இதில் நேற்றுமுன்தினம் வரை 108 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். எஞ்சிய 2 பேரும் நேற்று வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, கனிமொழி எம்பி, அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் செல்வபெருந்தகை, திருமாவளவன், சீமான், நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட தலைவர்கள் நேரில் வந்து இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினர். ஆனால் தவெக நிர்வாகிகள் யாரும் இதுவரை வந்து எட்டிக்கூட பார்க்கவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்து அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை முதல்வர் அமைத்தார். இதன்படி அருணா ஜெகதீசன் கரூரில் 2 நாள் முகாமிட்டு விசாரணை நடத்தினார். மேலும் விசாரணை அதிகாரியாக ஏடிஎஸ்பி பிரேமானந்த் நியமிக்கப்பட்டார். இது தொடர்பாக கரூர் மேற்கு மாவட்ட தவெக செயலாளர் மதியழகன் உள்பட இருவரை போலீசார் கைது செய்தனர். இதேபோல் தவெக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணைப் பொதுச்செயலாளர் நிர்மல் குமார் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.



இந்நிலையில் கரூர் சம்பவம் தொடர்பான வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது விஜய் தலைமை பண்புக்கே தகுதி இல்லாதவர் என்று கண்டனம் தெரிவித்த நீதிபதி, இது தொடர்பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைத்து உத்தரவிட்டார்.

மேலும் ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். மேலும் புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார் தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. எனவே புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார், ஆதவ் அர்ஜுனா ஆகியோரை கைது செய்ய போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில் நீதிமன்றம் அமைத்த சிறப்பு புலனாய்வு குழுவில் சியாமளா தேவி, விமலா ஆகிய 2 பெண் எஸ்பிக்கள் இடம்பெற்றுள்ளனர். ஏடிஎஸ்பிக்கள், டிஎஸ்பிக்கள் உள்ளிட்ட மேலும் சில அதிகாரிகள் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவினரிடம் கரூர் விசாரணை அதிகாரி ஏடிஎஸ்பி பிரேமானந்த் வழக்கு ஆவணங்களை ஒப்படைக்க இன்று சென்னை புறப்பட்டு சென்றார். இன்று மாலைக்குள் வழக்கு ஆவணங்கள் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மதுரையில் அம்மா உணவக பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் தேர்வு

மதுரை. அக்.05

மதுரை மாவட்டம் அம்மா உணவக பணியாளர்கள் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மதுரை மாவட்ட தலைவர் இளங்கோ தலைமையில் 43 பணியாளர்கள் இணைந்துள்ளார்கள் இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மதுரை மாவட்ட நிர்வாகிகள் சண்முகசுந்தரம், சசிகுமார், ஆதி.குமார், சரவணகுமார், செந்தில்குமார், ஆகியோர் கலந்து. கொண்டு சிறப்பித்தனர் இக்கூட்டத்தில் அம்மா உணவக பணியாளர்கள் சங்க அமைப்பு அமைக்கப்பட்டு கீழ்காணும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள் மாவட்டத் தலைவர் முருகேஸ்வரி, துணைத்தலைவர் கலைவாணி, மாவட்ட செயலாளர் பரமேஸ்வரி, துணை செயலாளர் பாலா ஜோதி, பொருளாளர் முருகேஸ்வரி, இணைச் செயலாளர் சூர்யா, அமைப்பு செயலாளர் ஈஸ்வரி, மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர் பின்னர் இவர்களுக்கு மாநில, மாவட்ட, வட்டக்கிளை, நிர்வாகிகள் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர் முடிவில் சூர்யா, நன்றி கூறினார்.





# திருப்பூர் மாவட்டம் உடுமலை பெரிய வாளவாடியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்

திருப்பூர், அக்.05-

திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றியத்துக்கு உட்பட்ட பெரிய வாளவாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் கலைஞர் காப்பீட்டு அட்டை, மகப்பேறு பெட்டகம் மாத்திரை பாக்ஸ், மருத்துவ பரிசோதனை செய்த பொது மக்களுக்கு கணினி மூலம் பதிவு செய்து மருத்துவ அட்டைகளை திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன் எம்.பி. கே. ஈஸ்வர சாமி திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ., உடுமலை மத்திய, கிழக்கு,மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர்கள் செழியன், தங்கராஜ், செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் ஜெயந்தி, மடத்துக்குளம் முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் பாபு, மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் அனிதா ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை சார்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், தனியார் செவிலியர் மிகச் சிறப்பான முறையில் பொதுமக்களுக்கு மருத்துவத்துறையைச் சார்ந்தவர் பணியாற்றினார்கள். முகாமில் மருத்துவ சோதனைக்கு வந்த முதியவருக்கு 100 நாள் வேலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரைத்தார்.




# வடலூரில் சட்டமாமேதை அம்பேத்கார் சிலை குப்பை வண்டியில் ஏற்றியசெயல் இந்திய குடியரசு கட்சி பாலவீரவேல் கண்டனம்



வடலூர், அக்.05-

இந்தியகுடியரசுகட்சி கடலூர்மாவட்டதலைவர் பாலவீரவேல் அறிக்கை :

சாலைவிரிவாக்கம் என்றபெயரில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி அனுமதிபெறாமல், கடலூர்மாவட்டம். வடலூர் நான்கு முனை சந்திப்பில் பாபா சாகேப் .டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் மற்றும் தந்தை பெரியாரின் திருஉருவசிலை உள்ளது. இச்சிலை கிட்டதட்ட 1993 ஆம் ஆண்டிலிருந்து உள்ளது. சட்டமாமேதை டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலையை பூர்விக தமிழர்களான ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட்டோரின் சமுக நல்லிணகத்திற்காக பாட்டாளி மக்கள்கட்சி நிறுவனத்தலைவர் இராமதாஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இத்திருஉருவசிலையை நேற்று நள்ளிரவில் ஜேஜிபி இயந்திரம் கொண்டு அகற்றி நகராட்சி குப்பை வண்டியில் ஏற்றிய செயல் மிகுந்த கண்டனத்திற்குரியது. இச்செயலை செய்தவர்களை தமிழக அரசும், .மாவட்ட நிர்வாகமும் கண்டிக்கவேண்டும். மேலும் வெரும் கண் துடைப்புக்காக வென்கலம் சிலை வைப்போம் என்று பிரச்சனைக்கு இப்போது முற்று புள்ளி வைப்பதாக கூறக்கூடாது. போர்கால அடிப்படையில் உடனடியாக புதியபேருந்துநிலையம் நுழைவாயிலில் இரு பெரும்தலைவர்களின் திருஉருவ சிலையை நிறுவவேண்டும் காலம்கடத்தினால் எங்கள்கட்சியின் மாநிலதலைவரும், முன்னாள் சட்டப்பேரவை தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர். செ.கு.தமிழரசன் ஆணைக்கிணங்க. வடலூரில் இந்தியகுடியரசுகட்சி சார்பாக போராட்டம் நடத்துவோம் என இந்தியகுடியரசுகட்சி கடலூர்மாவட்டதலைவர் பாலவீரவேல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# கரூர் துயரம்: ஒரு வாரத்துக்குப் பின் தவெக சார்பில் நேரில் ஆறுதல்







கரூர், அக்.05-

கரூரில் தவெக தலைவர் விஜய் உத்தரவின் பேரில், உயிர் இழந்தவர்கள் குடும்பத்தினரை முதன்முறையாக தவெக கரூர் மாவட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

கரூரில் கடந்த 27 ஆம் தேதி நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பிரச்சாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ஏற்கெனவே, உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை கரூர் மாவட்ட நிர்வாகிகள் சேகரித்து, அந்தப் பட்டியலை தமிழக வெற்றி கழகத்தின் தலைமைக்கு அனுப்பி வைத்த நிலையில், தற்போது பாதிக்கப்பட்டவர்களை விஜய் உத்தரவின் பேரில் தவெகவினர் நேரில் சந்தித்து வருகின்றனர்.

மேலும், விரைவில் கட்சியின் தலைவர் விஜய் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க இருப்பதாகவும், உரிய உதவிகள் செய்து தருவதாக உறுதி அளித்து வருகின்றனர். இந்த சந்திப்புகளின்போது தவெக மேற்கு மண்டலச் செயலாளர் பாலு உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கரூர் துயரக்குப் பின்னால்... கரூர் வேலுசாமிபுரத்தில் செப்.27ல் நடந்த தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். ஆனால், அன்று இரவே திருச்சி வந்த விஜய், தனி விமானம் மூலம் உடனடியாக சென்னை திரும்பினார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து சென்னை வந்த சில மணி நேரங்களில் அவர் ஓர் இரங்கல் ட்வீட்டை வெளியிட்டார். அதில் விஜய், "இதயம் நொறுங்கிப் போய் இருக்கிறேன். தாங்க முடியாத, வார்த்தைகளால் சொல்ல முடியாத வேதனையிலும், துயரத்திலும் உழன்று கொண்டிருக்கிறேன். நம் உறவுகளை இழந்து தவிக்கும் பெருந்துயர்மிகு மனநிலையில், என் மனம் படுகிற வேதனையை எப்படி சொல்வதென்றே தெரியவில்லை.

கண்களும், மனசும் கலங்கித் தவிக்கிறேன். நான் சந்தித்த உங்கள் எல்லோருடைய முகங்களும் என் மனதில் வந்து போகின்றன. என் சொந்தங்களே, நம் உயிரனைய உறவுகளை இழந்து தவிக்கும் உங்களுக்கு, சொல்லொணா வேதனையுடன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்ளும் அதே வேளையில், இந்த பெரும் சோகத்தை உங்கள் மனதுக்கு நெருக்கமாக நின்று பகிர்ந்துகொள்கிறேன்.

நமக்கு ஈடுசெய்யவே இயலாத இழப்புதான். யார் ஆறுதல் சொன்னாலும் நம் உறவுகளின் இழப்பை தாங்கவே இயலாது. இருந்தும், உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உறவை இழந்து தவிக்கும் நம் சொந்தங்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.20 லட்சமும், காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்கு தலா ரூ.2 லட்சமும் அளிக்க எண்ணுகிறேன்.

இழப்புக்கு முன்னால் இது ஒரு பெரும் தொகையன்று தான். ஆனாலும், இந்த நேரத்தில், எனது உறவுகளான உங்களுடன் மனம்பற்றி நிற்க வேண்டியது உங்கள் குடும்பத்தை சேர்ந்தவனாக என் கடமை. அதேபோல, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அனைத்து உறவுகளும் மிக விரைவில் குணமடைந்து வீடு திரும்ப இறைவனை பிரார்த்திக்கிறேன். சிகிச்சையில் இருக்கும் நம் உறவுகள் அனைவருக்கும் அனைத்து உதவிகளையும் தவெக உறுதியாக செய்யும். இறைவன் அருளால், அனைத்தில் இருந்தும் நாம் மீண்டு வர முயற்சிப்போம் ." என்று தெரிவித்திருந்தார்.

'களத்தில் காணோமே'

விஜய்யின் ட்வீட் வெளியான நிலையில், விஜய் கரூர் வந்தால் நிலைமை சிக்கலாகலாம், ஆனால் இரண்டாம் நிலை தலைவர்கள் கூடவா வர இயலாது. மாவட்ட அளவிலான நிர்வாகிகள் எங்கே எனக் கடுமையான விமர்சனங்கள் எழுந்து வந்தன. இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை விஜய் உத்தரவின் பேரில் தவெகவினர் நேரில் சந்தித்து வருகின்றனர். மேலும், விரைவில் கட்சியின் தலைவர் விஜய் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க இருப்பதாகவும், உரிய உதவிகள் செய்து தருவதாக உறுதி அளித்து வருகின்றனர்.



## தங்கம் வெள்ளி விலை நிலவரம்

**தங்கம் - 10950 வெள்ளி - 165**

# மேகமலை அருவியில் கடும் வெள்ள பெருக்கு: சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை

தேனி, அக்.05-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள மேகமலை அருவியில் கடும் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.



இதனால் சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க வனத்துறை தடை விதித்துள்ளது. நேற்று இரவு முதல் மேற்குத்தொடர்ச்சி மலை பகுதியில் மேகமலைக்கு மேற்புற உள்ள கேரளா மாநில எல்லை மற்றும் வனப்பகுதிகளில் கனமழை பெய்து வந்தது. இந்த மழையால் மேகமலை அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆண்டிபட்டி அருகில் உள்ள கோம்பைத்தொழு வனப்பகுதியில் அமைந்துள்ள மேகமலை அருவியில் தண்ணீர் அபாய அளவை தாண்டி விழுகிறது. இதனால் சுற்றுலா பயணிகளுக்கு மேகமலை வனத்துறை தடை விதித்துள்ளது. அருவியில் நீர்வரத்து சீராகும் வரை இந்த தடை தொடரும் என மேகமலை வனத்துறை தெரிவித்துள்ளது. இதனால் மேகமலை அருவி பகுதிக்கு சுற்றுலா பயணிகள் யாரும் வர வேண்டாம் என வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.



# திருச்சி பழைய கோவில் திருவிழாவை முன்னிட்டு கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் சார்பில் கொடிபவனி இனிகோ இருதயராஜ் எம் எல்.ஏ பங்கேற்பு

திருச்சி, அக்.05-

திருச்சி எடத்தெரு பழைய கோவில் ஜெபமாலை அன்னையின் 277 வது ஆண்டு திருவிழா நேற்றுமுன்தினம் மாலை தொடங்கியது.

விழாவை முன்னிட்டு புனித ஜெபமாலை மாதா பக்தர்கள், பங்கு மக்கள் சார்பில் கொடிபவனி நடைபெற்றது.

இதில் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவருமான இனிகோ இருதயராஜ் கலந்துகொண்டார்.

கொடிபவனி எடத்தெரு அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு பழைய கோவிலை சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து கொடியேற்று விழா ஆராதனை நடைபெற்றது. நிகழ்ச்சியில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க மாநில பொது செயலாளர் ஜான் பிரகாஷ் எபினேஷன், மாநில இளைஞரணி செயலாளர் அடைக்கலராஜா. மாநில பொறுப்பாளர்கள் : சவால்ராம், ஜேக்கப் சரவணன், ஜான்சன், வின்சென்ட்.

பிரான்சிஸ்சேவியர், மேற்கு மாவட்ட செயலாளர் அன்னை ஆண்டனி, மாவட்ட பொறுப்பாளர்கள் அவைதலைவர் ஜேக்கப், செய்திதொடர்பாளர் தன்ராஜ், துணைதலைவர்கள் வாசுகிஅமலா, டாக்டர் ஏனோக்மதுரம், துணைசெயலாளர் செல்வி, வழக்கறிஞர் அணிசெயலாளர் தாமஸ், இளைஞரணி செயலாளர் ஜான்பிரகாஷ், கிஷோர், பி. சி.பொறுப் பாளர் பொன். பிரிட்டோ, தொகுதி செயலா ளர்கள் கனகராஜ், மைக்கேல் ஆல்பர்ட், தகவல் தொழில்நுட்ப செயலாளர் ஜூலி, எட்வர்ட், உறையூர் ஜேம்ஸ், லூர்துராஜ். பகுதி செயலாளர்கள் ஆல்பர்ட், ஜான்போஸ்கோ, சேவியர்ராஜ், வட்ட செயலர்கள் குமார்,

சோபியா, மணி, ரோமியோ, ராபர்ட்பெல்லா, ஜெரால்ட், ஆரோக்யராஜ், ஸ்டாலின் சேவியர் பகுதி நிர்வா கிகள், வட்ட நிர்வாகிகள், மகளிரணியினர் மற்றும் இயக்கத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செயலாளர் புஷ்பராஜ் செய்திருந்தார்.

# எச்1பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு

வாஷிங்டன், அக்.05-

எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக அறிவித்த அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் முடிவை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சுகாதார நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்டோரைக் கொண்ட கூட்டமைப்பு ஒன்று, ட்ரம்ப் அறிவித்துள்ள எச்1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அவர்கள் தங்கள் மனுவில், "எச்1பி விசாவுக்கான புதிய விதிமுறைகளை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த செப்டம்பர் 19ல் வெளியிட்டார். அதில், எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2,000 டாலர் என்பதிலிருந்து 5 ஆயிரம் டாலராக கட்டணத்தை அதிகரித்த ட்ரம்ப், தற்போது பன்மடங்கு உயர்த்தி இருப்பது திறமையான வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியிருக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எச்1பி விசா திட்டம், வெளிநாட்டு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கல்வியாளர்களை அமெரிக்காவில் பணியமர்த்துவதற்கான ஒரு முக்கிய திட்டம். இது அமெரிக்காவின் புதுமை மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. சிறப்புத் துறைகளில் பணியாளர்களை நிரப்ப இது அனுமதிக்கிறது.




அரசின் தற்போதைய முடிவால், மருத்துவமனைகள் மருத்துவ ஊழியர்களையும், தேவாலயங்கள், போதகர்களையும், வகுப்பறைகள் ஆசிரியர்களையும், நாடு முழுவதும் உள்ள தொழில்கள் முக்கிய கண்டுபிடிப்பாளர்களையும் இழக்கும் அபாயம் உள்ளது. எனவே, இந்த உத்தரவை தடுத்து, முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான முன் கணிப்புத் தன்மையை மீட்டெடுக்குமாறு கோருகிறோம்" என தெரிவித்துள்ளனர்.

எச்1பி விசா திட்டம், அமெரிக்க நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. அதிக திறமைகளைக் கொண்ட பணியாளர்களை ஈர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட இந்த விசா மூலம் அமெரிக்காவில் இருப்போரில் மூன்றில் ஒரு பங்கு பேர், செவிலியர்களாகவும், ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், பாதிரி யார்களாகவும், போதகர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டம் உள்ளிக்கோட்டை ஊராட்சியில் நடைப்பெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமில் மாண்புமிகு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள்,மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை.செல்வராஜ் ஆகியோர் உணவு பாதுகாப்பு குறித்து துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார்கள்.

# காசோலை டெபாசிட் செய்தால் உடனே பணம்: வங்கிகளில் நேற்று முதல் அமல்



புதுடெல்லி, அக்.05-

காசோலையை வங்கிகளில் டெபாசிட் செய்தால் இனி நாள் கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே நாளில் கையில் பணம் கிடைக்கும் வசதியை வங்கிகள் நேற்று முதல் அமல்படுத்தப்பட்டது.

விரைவான மற்றும் பாதுகாப்பான பணம் செலுத்துவதற்கான புதுப்பிக்கப்பட்ட தீர்வு கட்டமைப்பை ரிசர்வ் வங்கி வடிவமைத்துள்ளது. இதைத் தொடர்ந்து எச்டிஎப்சி, ஐசிஐசிஐ உள்ளிட்ட தனியார் வங்கிகள் ஒரே நாளில் காசோலையை பணமாக மாற்றுவதற்கான (கிளியரிங்) வசதியை நேற்று முதல் (அக்.4) தொடங்கியது.

இதன்படி, அக்டோபர் 4 முதல் டெபாசிட் செய்யப்படும் காசோலைகள் இனி இந்த புதிய முறையின் கீழ் ஒரே நாளில் பரிசீலிக்கப்பட்டு பணம் சில மணி நேரங்களுக்குள் வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். காசோலைகள் பவுன்ஸ் ஆவதை தடுக்கவும், தாமதங்கள் அல்லது நிராகரிப்பு செய்யப்படுவதை தவிர்க்கவும் காசோலையில் அனைத்து விவரங்களையும் துல்லியமாக நிரப்பப்படுவதை உறுதி செய்யும்படி வாடிக்கையாளர்களை இந்த இரு தனியார் துறை வங்கிகளும் அறிவுறுத்தியுள்ளன.

பாசிட்டிவ் பே சிஸ்டத்தை பயன்படுத்தி பாதுகாப்பை மேம்படுத்தவும், சரிபார்ப்புக்கான முக்கிய காசோலை விவரங்களை முன்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும் என்றும் வாடிக்கையாளர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ரூ.50,000 க்கும் அதிகமான காசோலைகளை டெபாசிட் செய்வதற்கு குறைந்தது 24 மணி வேலை நேரத்திற்கு முன்னதாக கணக்கு வைத்திருப்பவர்கள் கணக்கு எண், காசோலை எண், தேதி, தொகை மற்றும் பயனாளியின் பெயரை வங்கிக்கு வழங்க வேண்டும்.

காசோலையை வழங்கியவுடன் வங்கிகள் இந்த விவரங்களைச் சரிபார்க்கும். தகவல் பொருந்தினால் காசோலைகள் கிளியர் செய்யப்படும்; இல்லையெனில் கோரிக்கை நிராகரிக்கப்படும். மேலும், பணம் எடுப்பவர் விவரங்களை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட பிராந்திய முகவரிகளுக்கு காசோலை விவரங்களை மின்னஞ்சல் செய்ய வேண்டும். வங்கிகள் காசோலையைப் பெறுவதற்கு முன்பு ஒப்புதல் செய்தியை அனுப்பும்.

மேலும், ரூ.5 லட்சத்திற்கு மேல் உள்ள காசோலைகளுக்கு ஆர்பிஐ பாசிட்டிவ் பேவை கட்டாயமாக்கியுள்ளது, அதே நேரத்தில் ரூ.50,000 க்கு மேலான காசோலைகளுக்கும் இது கட்டாயம் பரிந்துரைக்கப்படுகிறது. பாசிட்டிவ் பேவின் கீழ் சரிபார்க்கப்பட்ட காசோலைகள் ரிசர்வ் வங்கியின் குறை தீர்வு முறையின் கீழ் பாதுகாக்கப்பட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# 2026 தேர்தலில் பிராமணர்களுக்கு 5 இடங்களில் போட்டியிட வாய்ப்பு: நாம் தமிழர் கட்சி முக்கிய முடிவு



சென்னை, அக்.05-

தமிழகத்தில் நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை களமிறக்கவும், பிராமணர்களுக்கு 5 இடங்களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி கொண்டிருக்கிறது.

இதையொட்டி ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான வியூகம் அமைத்தல், கூட்டணி பேச்சுவார்த்தை, தங்களது கட்சிகளின் வேட்பாளர்களை தேர்வு செய்தல், பூத் கமிட்டிகளை வலுப்படுத்துதல் போன்ற தேர்தல் பணிகளில் தீவிர கவனம் செலுத்திவருகின்றன.

அதற்கேற்ப கட்சிகளின் தலைமை, மாவட்ட அளவில் கலந்தாய்வு கூட்டங்கள், பரப்புரை கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் 2026 தேர்தலில் நாம் தமிழர் கட்சியும் தேர்தலுக்கான களப் பணிகளில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது.

அதன்படி தேர்தலுக்கு ஓராண்டு காலத்துக்கு முன்பாகவே தனித்துத்தான் போட்டி என்று அறிவித்து, கட்சி உட்கட்டமைப்பு பணிகளில் நாம் தமிழர் கட்சி கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண் வேட்பாளர்களை நிறுத்தவும், பிராமணர்களுக்கு 5 இடங் களில் வாய்ப்பளிக்கவும் நாம் தமிழர் கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் (ஐபிஎல்) இரா.ஐயனார் கூறுகையில், "நாம் தமிழர் கட்சி 2026 தேர்தலுக்கான பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுவரை தேர்தலையொட்டி 150க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை தொகுதி பங்கீடு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் சரிசமமாக வழங்கப்படும். அந்தவகையில் 2026 தேர்தலில் 234 தொகுதிகளில் தலா 117 பெண்கள், 117 ஆண்கள் நிறுத்தப்பட உள்ளனர்.

குறிப்பாக இந்தமுறை அனைத்து தனித் தொகுதிகளிலும் பெண்களுக்கே வாய்ப்பளிக்கப்பட உள்ளது. அதேபோல் இதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் முன்னெடுக்காத வகையில் முதல்முறையாக 5 இடங்களில் பிராமணர்களுக்கு வாய்ப்பளிக்க உள்ளோம். இதற்கு முன்பு தமிழக அரசியல் வரலாற்றில் கும்பகோணம் அல்லது மயிலாப்பூர் ஆகிய 2 தொகுதிகளுக்கு மட்டுமே பிராமணர்களுக்கு இதர கட்சிகளில் வாய்ப்பளிக்கப்படும்.

ஆனால் 2026 தேர்தலில் முதல்முறையாக பிராமணர்களுக்கு அதிகப்படியான இடங்களை நாம் தமிழர் கட்சி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த 5 பேரில் நான்கு பேர் பெண்களாவர்.

இந்த வேட்பாளர்கள் சென்னையில் மயிலாப்பூர், ஆலந்தூர், தி.நகர், சைதாப்பேட்டை ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிட உள்ளனர். இவர்கள் உட்பட சென்னையில் உள்ள 16 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் வேட்பாளர் தேர்வு நிறைவடைந் துள்ளதும் குறிப்பிடத்தக்கது" என்று தெரிவித்தார்.

# முதல்வர் கரூருக்கு சென்றது தேர்தல் ஆதாயத்துக்காகத்தான்: பழனிசாமி விமர்சனம்



தருமபுரி, அக்.05-

'விஷச் சாராய உயிரிழப்புகளின் போது கள்ளக்குறிச்சிக்கு ஆறுதல் கூற செல்லாத முதல்வர் ஸ்டாலின், தேர்தல் ஆதாயத்துக்காக தற்போது கரூருக்குச் சென்றுள்ளார்', என பாலக்கோடு பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசினார்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் பேருந்து நிலையம் அருகில் அதிமுக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியதாவது: கச்சத்தீவு பற்றி பேச முதல்வர் ஸ்டாலினுக்கு தகுதி இல்லை. ஏனெனில், மத்தியில் காங்கிரஸும், தமிழகத்தில் திமுகவும் ஆட்சியில் இருந்த காலத்தில் தான் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டது.

ஆனால், அதிமுக கச்சத் தீவை மீட்க உச்ச நீதிமன்றம் வரை சென்றது. ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களின் பிரச்சினைகளுக்காக போராடி வருவது அதிமுக தான். மக்களுக்காக செயல்படும் கட்சி அதிமுக. கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் பற்றி அறிந்ததும் இரவோடு இரவாக முதல்வர் ஸ்டாலின் நேரில் சென்று பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆறுதல் கூறினார். அதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால், கள்ளக்குறிச்சி விஷச் சாராய உயிரிழப்புகளின்போது அவர் ஏன் செல்லவில்லை. தற்போது அவர் சென்றிருப்பது தேர்தல் ஆதாயத்தைக் கருத்தில் கொண்டுதான். பழனிசாமிக்கு கொள்கை இல்லை என கூற ஸ்டாலினுக்கு தகுதி உள்ளதா? முரண்பட்ட கொள்கைகளுடன் கூடிய கட்சிகள் இணைந்து ஏற்படுத்திய இண்டியா கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் நோக்கமும், கொள்கையும் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பது மட்டும்தான்.

திமுக கூட்டு சேர்ந்து மத்திய அமைச்சரவை யில் இடம்பெற்றபோது பாஜக நல்ல கட்சி. அதிமுக கூட்டணி சேரும்போது பாஜக மதவாதக் கட்சியா? தமிழகத்தில் திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் பாஜகவுடன் கூட்டணி சேர்ந்துள்ளோம்.

கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட தருமபுரி மாவட்டத்துக்கான நீர்ப்பாசன திட்டங்கள் எதையும் திமுக அரசு நிறைவேற்றித் தரவில்லை. ஒரு திட்டத்தை நிறைவேற்ற 53 மாதங்கள் போதாதா? எனவே, மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கான இந்த திட்டங்கள் நிறைவேற்றப்படும். இவ்வாறு பேசினார்.

கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் எம்எல்ஏ மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதற்கிடையே தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் பழனிசாமி பதிவிட்டிருப்பதாவது:

எங்கள் கூட்டணி கொள்கை: ஆட்சி நிர்வாகத்தில், நிதி நிர்வாகத்தில், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில், பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதில், போதைப்பொருள் புழக்கம் மற்றும் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி அடைந்துள்ள திமுக ஆட்சியை விரட்டியடிக்க வேண்டும் என்பதே எங்கள் கூட்டணி கொள்கைக்கான அடிப்படை. இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.



# கரூர் சம்பவம் குறித்து நீதிமன்றம் சொன்னது சரி: அமைச்சர் நேரு பேட்டி

திருச்சி, அக்.05-

அமைச்சர் கே.என்.நேரு திருச்சியில் இன்று அளித்த பேட்டி: தமிழகத்தில் பல்வேறு பிரச்னைகள் நடைபெற்று வருகிறது. வெள்ளம் வந்தது. அப்போது வராத பாஜக எம்பிக்கள் குழு உடனடியாக இந்த நிகழ்வுக்கு வருவதற்கு காரணம் என்ன என்று முதல்வர் நேற்று கேள்வி எழுப்பியுள்ளார். கரூர் சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் கூறியதுதான் உண்மை நிலைமை. கரூர் துயர சம்பவம் குறித்து உயர் நீதிமன்றம் சரியாகத்தான் கூறி இருக்கிறது.

விஜய் நேரில் வந்து பார்க்கவில்லை என பத்திரிகை மற்றும் ஊடகங்கள் கூறுகிறது. விஜய் கூட்டத்திற்கு அனுமதி வாங்கியவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஜிஎஸ்டி 2.0 வரி குறைப்பு காரணமாக நவராத்திரி விற்பனை அமோகம்

புதுடெல்லி, அக்.05-

நாட்டில் வழக்கமாக நவராத்திரி மற்றும் பண்டிகை காலத்தில் மக்களின் நுகர்வு அதிகரிக்கும். ஆண்டு விற்பனையில் 40 முதல் 45 சதவீதம் இந்த பண்டிகை காலத்தில் மட்டுமே நடைபெறும். இந்த முறை ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டது. இதனால் கார்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களின் விலை குறைந்தது. இதனால் மக்களின் நுகர்வும் பல மடங்கு அதிகரித்தது. குறிப்பாக கார்கள் விற்பனை பல மடங்கு அதிகரித்தது.

நவராத்திரியின் முதல் நாளில் 30,000 கார்களை விற்ற மாருதி சுசுகி நிறுவனம், 8 நாட்களில் 1.65 லட்சம் கார்களை விற்பனை செய்துள்ளது. பண்டிகை காலத்தில் கார்களின் முன்பதிவு 2 லட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக மாருதி நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்த நவராத்திரி காலத்தில் 85,000 மாருதி வாகனங்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டன.

மகேந்திரா அண்டு மகேந்திரா நிறுவனத்தின் விற்பனை இந்தாண்டில் 60 சதவீதம் அதிகரித்துள்ளது. டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 50,000 வாகனங்களை விற்றுள்ளது. ஹூண்டாய் நிறுவனத்தின் மொத்த விற்பனை 72 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது. இதேபோல் இரு சக்கர வாகனங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளது.

# "நான் என்ன தவெகவின் மார்க்கெட்டிங் ஆபிசரா?" அண்ணாமலை திடீர் கோபம்



மதுரை, அக்.05-

"விஜயிடம் கேட்க வேண்டிய கேள்விகளை என்னிடம் ஏன் கேட்கிறீர்கள். நான் என்ன தவெகவின் மார்க்கெட்டிங் ஆபிசரா?" என்று பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கோபமாக பேசினார்.

தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை விமானம் மூலம் மதுரை வந்தார். மதுரை விமான நிலையத்தில், அவரை மதுரை மாநகர், கிழக்கு மாவட்ட பாஜக தலை வர்கள் மாரிசக்கரவர்த்தி, ராஜசிம்மன் மற்றும் முன்னாள் நிர்வாகி ஹரிகரன் மற்றும் பலர் வரவேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலையிடம் 'பாஜகவின் ஏ டீம் தான் தவெக' என சீமான் கூறியிருப்பது தொடர்பாக செய்தியாளர்கள் கருத்து கேட்டனர்.

அதற்கு பதில் அளித்த அண்ணாமலை, "இதை விஜய்யிடம் கேளுங்கள், அவரை தவிர எல்லோரும் பேசுறாங்க, தவெக கட்சியினரை கேளுங்கள், நான் என்ன தவெகவுக்கு மார்க்கெட்டிங் ஆபீசரா? தைரியம் இருந்தால் என்ன செய்ய வேண்டும். விஜய்யிடம் கேளுங்கள், தவெகவிடம் கேளுங்கள், தவெக செய்தித் தொடர்பாளர்களிடம் கேளுங்கள். சும்மா என்னையே தொந்தரவு செய்கிறீர்கள்.

சென்னையில் கேட்கிறீங்க, மதுரை வந்தாலும் கேட்கிறீங்க. நான் என்ன கருத்து சொல்ல முடியும்? சொல்ல வேண்டிய கருத்துகளை ஏற்கெனவே கூறிவிட்டேன். அதற்கு பிறகும் அவர் சொன்னார், இவர் சொன்னார் கேள்வி எழுப்புகின்றனர். நீங்க யார் கிட்ட கேள்வி கேட்க வேண்டும், சம்பந்தப்பட்ட நபர்களிடம் கேள்வி கேட்க வேண்டும்" என்று அண்ணாமலை காட்டமாக கூறினார்.

# விஜய்யை கூட்டணிக்குள் இழுக்க பாஜக முயற்சி செய்கிறது: சீமான்

சென்னை, அக்.05-

"தவெக தலைவர் விஜய்யை கூட்டணிக்குள் இழுக்க பாஜக முயற்சி செய்கிறது" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் திருச்செந்தூரில் செய்தியாளர்களிடம் பேசியதாவது: தம்பி விஜய் கரூருக்கு வருவதால் தான் இந்த கூட்டம் வருகிறது. இந்த கூட்டத்துக்கு அவரின் வரவு தான் முக்கியக் காரணம். கரூர் சம்பவத்துக்கு பொறுப்பேற்று, நான் வருந்துகிறேன் என விஜய் கூறியிருந்தால் அது முற்று பெற்றிருக்கும். கரூர் சம்பவத்துக்கு அரசு தான் பழியை ஏற்க வேண்டும், காவல்துறை தான் பொறுப்பேற்க வேண்டும் என சொல்வதில் தான் சிக்கல் உண்டாகிறது.

இச்சம்பவத்தில் அரசு, விஜய் ஆகிய இரு தரப்புக்கும் பொறுப்பு இருக்கிறது. மாற்றி மாற்றி இவர்கள் பழி போடுவதை பார்க்கும் போது, உயிரிழப்புகளை விட கொடுமையானதாக இருக்கிறது. கரூர் பிரச்சாரத்தை தொடங்குவதற்கு முன்பு காவல்துறைக்கு நன்றி சொல்லித்தான் விஜய் தனது பேச்சை தொடங்குகிறார். ஆனால் உயிரிழப்பு ஏற்பட்டவுடன் பழி போடுகிறார்.

பாஜக எப்படியாவது விஜய்யை கூட்டணிக்குள் கொண்டு வர முயற்சி செய்கிறது. தமிழ் தேசியமும், திராவிடமும் ஒன்று என விஜய் கூறியது கொடுமையானது. இவை இரண்டும் மாறுபட்டவை. இவ்வாறு சீமான் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானின் 10 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தினோம்: ஆபரேஷன் சிந்தூர் குறித்து இந்திய விமானப் படை தளபதி தகவல்

புதுடெல்லி, அக்.05-

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது பாகிஸ்தானின் 10 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தினோம் என்று இந்திய விமானப் படை தளபதி ஏ.பி.சிங் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அண்மையில் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது பேசிய அவர், "கடந்த மே மாதம் இந்தியாவுடன் ஏற்பட்ட போரின் போது 7 இந்திய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தினோம்'' என்று தெரிவித்தார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் இந்திய விமானப் படை தளபதி ஏ.பி. சிங் டெல்லியில் நேற்று கூறியதாவது: இந்திய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தினோம் என்று அவர்கள் (பாகிஸ்தான்) கனவு கண்டால், அந்த கனவை நான் கலைக்க விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்து கனவிலேயே இருக்கட்டும்.

இந்தியா, பாகிஸ்தான் போரின்போது என்ன நடந்தது என்பது உலகத்துக்கு தெரியும். சுமார் 90 மணி நேரம் அதிதீவிர போர் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் பெரும் இழப்புகளை சந்தித்தது. போர் நீடித்தால் பேரழிவை சந்திக்க நேரிடும் என்பதால் சண்டை நிறுத்தத்தை அமல்படுத்த அந்த நாடு மன்றாடியது. பாகிஸ்தான் ராணுவத்தின் டிஜிஎம்ஓ இந்திய ராணுவ அதிகாரியை நேரடியாக தொடர்பு கொண்டு பேசினார்.

பாகிஸ்தான் மீது போர் தொடுக்க வேண்டும் என்பது இந்தியாவின் நோக்கம் கிடையாது. அந்த நாட்டில் செயல்பட்ட தீவிரவாத முகாம்களை அழிக்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். அந்த குறிக்கோளை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டோம். எனவே பொறுப்புள்ள நாடு என்ற வகையில் பாகிஸ்தானின் வேண்டுகோளை ஏற்று போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது.



ரஷ்யா, உக்ரைன் இடையே மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே கடந்த 2023ம் ஆண்டு முதல் போர் நீடித்து வருகிறது. இந்த விவகாரத்தில் இந்தியாவை முன்மாதிரியாக கொண்டு உலக நாடுகள் செயல்படலாம். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது பாகிஸ்தானின் விமானப் படைத் தளங்கள், ராணுவத் தளங்கள் தகர்க்கப்பட்டன. அந்த நாட்டின் 4 அதிநவீன ரேடார்கள் மற்றும் ஏவுகணை தடுப்பு சாதனங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. பாகிஸ்தானின் முரித், சாக்லாவில் செயல்பட்ட 2 கட்டுப்பாட்டு அறைகள், ஏராளமான ராணுவ நிலைகள் தரைமட்டமாக்கப்பட்டன.

வானில் பறந்து கொண்டிருந்த பாகிஸ்தானின் எப் 16 (அமெரிக்க தயாரிப்பு), ஜேஎப்17 (சீன தயாரிப்பு) ரகங்களை சேர்ந்த 4 முதல் 5 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்திய எல்லையில் இருந்து சுமார் 300 கி.மீ. தொலைவில் பாகிஸ்தான் வான்பரப்பில் பறந்த அதிநவீன உளவு விமானம் எஸ்400 ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பாகிஸ்தானின் முக்கிய விமானப் படைத் தளங்கள் மீது ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டன. இதில் விமானப் படைத் தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எப்16 ரகத்தை சேர்ந்த 4 முதல் 5 போர் விமானங்கள் தகர்க்கப்பட்டன. வானில் 5, தரையில் 5 என பாகிஸ்தானின் 10 போர் விமானங்கள் அழிக்கப்பட்டு உள்ளன. இவ்வாறு ராணுவ தளபதி ஏ.பி.சிங் தெரிவித்தார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000